**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி : 01.06.2026 – திங்கட்கிழமை                    நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று புதுடெல்லியில், மியான்மர் அதிபருடன் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.

சாலையோர வியாபாரிகளுக்கான பிரதமரின் ஸ்வாநிதி திட்டம் இன்றுடன் 6 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது.

புதுச்சேரி—கடலூர் சாலையில் ரயில்வே மேம்பாலம் கட்டும் பணிகளை, துணை நிலை ஆளுநர் திரு.கைலாஷ்நாதன் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுச்சேரியில், 2027ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பை வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளும் பணிகளை, மாவட்ட ஆட்சியர் திரு.குலோத்துங்கன் இன்று தொடக்கி வைத்தார்.

*மோடி-மியான்மர் (14)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மியான்மர் அதிபர் திரு. **யு மின் ஆங்-லைங்** ஆகியோர், இன்று புதுடெல்லியில் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினர். இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்றுப் பூர்வ உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது குறித்து இப்பேச்சுவார்த்தைகளின் போது விவாதிக்கப் பட்டது. பாதுகாப்பு, போக்குவரத்து தொடர்புகள் உட்பட வேறு பல துறைகளில் ஒத்துழைப்பு குறித்தும் பேச்சு வார்த்தைகள் இடம் பெற்றன. மியான்மர் அதிபர் இன்று மாலை புதுடெல்லி குடியரசு தலைவர் மாளிகையில், குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சந்திக்கிறார். கடந்த சனிக்கிழமை முதல் இந்தியாவில் 5 நாள் பயணம் மேற்கொண்டுள்ள அவர், நாளை மும்பை சென்று தொழில்—வர்த்தக தலைவர்களைச் சந்திக்கிறார். அண்டை நாடுகளுக்கு முதலிடம் அளிக்கும் கொள்கை, மற்றும், மகா சாகர் உள்ளிட்ட இந்தியாவின் கொள்கைகளில் மியான்மருக்கு முக்கிய இடம் இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

*ஸ்வாநிதி (08)*

சாலையோர வியாபாரிகளுக்கான பிரதமரின் **ஸ்வாநிதி திட்டம்** இன்றுடன் 6 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. இத்திட்டத்தினால், பிணையில்லா கடன், மற்றும், வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகள்

கிடைப்பதால், எண்ணற்ற சாலையோர வியாபாரிகளின் வாழ்க்கையே மாறி இருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். திட்டப் பயனாளிகளின் மன உறுதி மற்றும் கடின உழைப்பினால் நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்து வலுப்பெறும் என தாம் நம்புவதாகவும் சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். ஸ்வாநிதி திட்டம் குறித்து ஒரு தொகுப்பு…

**(வாய்ஸ்)**

*ஸ்வாநிதி -2 வாய்ஸ் (16)*

**(வாய்ஸ்)**

கடந்த 2020ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட பிரதமரின் ஸ்வாநிதி திட்டத்தின் கீழ், இதுவரை, 1 கோடியே 12 லட்சம் **பிணையில்லாக் கடன்கள்**, சாலையோர வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. 15 ஆயிரம் ரூபாய், 25ஆயிரம் ரூபாய், மற்றும், 50 ஆயிரம் ரூபாய் என 3 கட்டங்களாக, பிணையில்லா கடன் வழங்கப்படுவதாலும், **வட்டி மானியம், கடன் உத்தரவாத ஆதரவு** போன்ற சலுகைகள் கிடைப்பதாலும், சாலையோர வியாபாரிகள் கடன் பெறுவதும், நீடித்த வாழ்வாதாரத்தை உருவாக்கிக் கொள்வதும் எளிதாகி உள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை, 75 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பயன்பெற்றுள்ளனர். மொத்தம் 17 ஆயிரத்து 800 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளது. 55 லட்சம் பயனாளிகள், டிஜிட்டல் முறையில் திட்டத்தில் சேர்க்கப்பட்டதும்,

இத்திட்டத்தின் முக்கிய சாதனைகளில் ஒன்றாக உள்ளது. டிஜிட்டல் பரிவர்த்தனைகளுக்கான **கேஷ்-பேக்** ஊக்கத்தொகை மற்றும், **வட்டி மானிய**மாக, ஸ்வாநிதி திட்டப் பயனாளிகளுக்கு, சுமார் 800 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. பிரதமரின் ஸ்வாநிதி திட்டம், 2030 மார்ச் வரை நீட்டிக்கப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

*வேளாண்மை (19)*

மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான், இன்று மத்திய பிரதேஷ் மாநிலம், **ராய்சென்** மாவட்டத்தில், தேசிய அளவிலான, **வயல்வெளியைப் பாதுகாப்போம்** இயக்கத்தை தொடக்கி வைத்தார். விவசாய நிலங்களைப் பாதுகாத்து, விவசாயிகளிடையே அறிவியல் பூர்வ வேளாண்மையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. மண் வளத்தைப் பாதுகாத்தல் அனைவரின் கடமை என்பதால், குறிப்பாக விவசாயிகள், ரசாயன உரங்களின் பயன்பாட்டைத் தவிர்க்க வேண்டும் என அமைச்சர் திரு. சௌஹான் தமது உரையில் வலியுறுத்தினார். இந்த **பண்ணைப் பாதுகாப்பு** இயக்கத்தில், வேளாண் பல்கலைக் கழகங்கள், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், வேளாண் அறிவியல் மையங்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்று விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளனர். இது தொடர்பான நிகழ்ச்சிகளின்போது, மண் பரிசோதனை, இயற்கை வேளாண்மை மற்றும்

நீர் நிர்வாகம் பற்றிய தகவல்களும், மண் வள அட்டைகளும் விவசாயிகளுக்கு வழங்கப்படும். போலியான விதைகள், உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை கண்டுபிடிப்பது எப்படி என்பது குறித்தும் விவசாயிகளுக்கு கற்றுத் தரப்படும். பயிர்க்காப்பீடு, **கிசான் சம்மான்**, கிசான் கடன் அட்டை போன்ற, அரசின் பல்வேறு திட்டங்களால் பயன் பெறுவதில், தேவையான உதவிகளும் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

ஜல்சக்தி *(20)*

புதுடெல்லியில், நீர்வள மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி தொடர்பான தேசிய பயிலரங்கை, மத்திய ஜல்சக்தி அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல், அறிவியல்—தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் ஆகியோர் இணைந்து, இன்று தொடக்கி வைத்தனர். நீர்ப் பற்றாக்குறைக்கு தீர்வு காண்பது குறித்து விரிவாக விவாதிப்பதே இப்பயிலரங்கின் நோக்கம் என்று அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் கூறினார். பிரதமர் திரு. நரேந்திர மோடியின் **விக்சித் பாரத்** கனவை நனவாக்குவதில், நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் புதுமைப் படைப்புகளுக்கு முக்கிய இடம் இருக்கும் என்று அவர் தெரிவித்தார். நீர்வள ஆதாரங்களின் மதிப்பீடு, கண்காணிப்பு மற்றும் நிர்வாகத்தை செயற்கைக்கோள் தொழல்நுட்பம் மூலமாக மேற்கொள்வது குறித்து, இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்திற்கும், ஜல்சக்தி அமைச்சகத்திற்கும் இடையே, இன்றைய நிகழ்ச்சியின் போது,

புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. அனைத்து அரசுத் துறைகளும் இணைந்து பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதான பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அணுகுமுறைக்கு, இது மேலும் ஒரு எடுத்துக்காட்டு என்று அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார். தற்போது 9 பில்லியன் டாலராக உள்ள இந்திய விண்வெளி பொருளாதாரத்தின் மொத்த மதிப்பு, விரைவிலேயே 10 மடங்கு அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

*கைலாஷ்நாதன் ஆய்வு (13)*

புதுச்சேரி—கடலூர் சாலையில் தற்போது நடைபெற்று வரும் ரயில்வே மேம்பாலம் கட்டும் பணிகளை, துணை நிலை ஆளுநர் திரு.கைலாஷ்நாதன் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு, கட்டுமான பணிகளை விரைந்து முடிக்க, ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களுக்கு அவர் அறிவுறுத்தினார். பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் மாற்றுப்பாதையில் செல்ல தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்குமாறு, பொதுப்பணித் துறைக்கு அவர் உத்தரவிட்டார். தொடர்ந்து மறைமலை அடிகள் சாலை மற்றும் காமராஜர் சாலையில், உப்பனாறு கால்வாய் மேம்பால பணிகளையும், துணைநிலை ஆளுநர் பார்வையிட்டார். ஆய்வின் போது, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. நேரு,

திரு. ஜான் குமார், பொதுப்பணித் துறை செயலர் டாக்டர் முத்தம்மா மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

*புதுச்சேரி மக்கள் தொகை -1 (18)*

புதுச்சேரியில், 2027ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பை வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளும் பணிகளை, மாவட்ட ஆட்சியர் திரு.குலோத்துங்கன் இன்று தொடக்கி வைத்தார். ஆன்லைன் மூலம் வீடுகளைப் பட்டியலிடும் பணிகளைத் தொடர்ந்து, வாழ்க்கை வசதிகளின் நிலை குறித்த தரவுகளை வீடு வீடாகச் சென்று சேகரிக்கும் பணிகளில் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதற்கென 33 கேள்விகளை கேட்க அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தேசிய அளவிலான இப்பணிகள் நாட்டின் திட்டமிடல், தொகுதி மறுவரை மற்றும் பொதுக் கொள்கைகளின் திறம்பட்ட அமலாக்கத்திற்கு மிகவும் அவசியமானவை என்பதால் பொதுமக்கள் வீடு தேடி வரும் அதிகாரிகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என அரசு கேட்டுக்கொண்டுள்ளது. வீட்டு வளாகத்திற்குள் அதிகாரிகள் வருவதற்கும், கணக்கெடுப்பு எண் மற்றும் குறியீடுகளை இடுவதற்கும் மக்கள் அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பின் கீழ் சேகரிக்கப்படும் தனி நபர் தகவல்கள், சட்டப்படி முற்றிலுமாக பராமரிக்கப்படும் என்றும், சிவில் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளில் ஆதாரமாகப் பயன்படுத்தப்பட மாட்டாது என்றும் அரசு தெரிவித்துள்ளது.

*புதுச்சேரி மக்கள் தொகை -2 (04)*

வேண்டுமென்றே தவறான தகவல்களை அளித்தால் ஆயிரம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படலாம் என்றும் மாவட்ட ஆட்சியர் திரு.குலோத்துங்கன் தெரிவித்தார். மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து அவர் மேலும் கூறுகையில் …

**(வாய்ஸ்- குலோத்துங்கன்)**

*எல்.பி.ஜி. (06)*

நாடு முழுவதும், வர்த்தக பயன்பாட்டிற்கான 19 கிலோ எல்.பி.ஜி சிலிண்டர் விலை, உயர்த்தப் பட்டுள்ளது. சென்னையில் வர்த்தக எல்பிஜி விலை 42 ரூபாய் உயர்ந்துள்ளது. மேற்காசிய நிலவரங்கள் காரணமாக கச்சா எண்ணெய் மற்றும் எல்பிஜி இறக்குமதியில் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ள நிலையிலும், வீட்டு உபயோகத்திற்கான எல்பிஜி விலையில் மாற்றம் இல்லை.

*வானிலை (15)*

தென்மேற்குப் பருவமழை அடுத்த 2-3 நாட்களில் கேரளத்தின் சில பகுதிகளுக்கு முன்னேற, சாதகமான சூழல் காணப்படுவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வளிமண்டல சுழற்சி காரணமாக இன்று தமிழகத்தில் ஒருசில இடங்கள் மற்றும், புதுச்சேரி—காரைக்கால் பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கோவை, நீலகிரி, தேனி, திண்டுக்கல், கரூர், நாமக்கல், சேலம், ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, மதுரை, திருச்சி, நெல்லை, குமரி, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்கள், மற்றும், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலும், புதுச்சேரியிலும் வரும் 7ஆம்தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்க க்கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*விமானப் போக்குவரத்து (09)*

விசாகப்பட்டினத்தை தலைமை இடமாகக் கொண்டு தெற்கு கடலோர ரயில்வே மண்டலம் தொடக்கப்பட்டு இருப்பதால், ஆந்திர பிரதேசத்தில், சமநிலையான ஒருங்கிணைந்த வளர்ச்சி ஏற்பட ஏதுவாகும்

என்று, மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு கூறியுள்ளார். குறிப்பாக வடக்கு ஆந்திர மக்களுக்கு, மிகவும் கொண்டாடத் தக்க தருணம் இது என்று, அவர் இன்று இச்சாபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். ஆந்திர மக்களின் நீண்டகால கனவு தற்போது நனவாகி இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று புதுடெல்லியில், மியான்மர் அதிபருடன் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.

சாலையோர வியாபாரிகளுக்கான பிரதமரின் ஸ்வாநிதி திட்டம் இன்றுடன் 6 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது.

புதுச்சேரி—கடலூர் சாலையில் ரயில்வே மேம்பாலம் கட்டும் பணிகளை, துணை நிலை ஆளுநர் திரு.கைலாஷ்நாதன் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுச்சேரியில், 2027ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பை வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளும் பணிகளை, மாவட்ட ஆட்சியர் திரு.குலோத்துங்கன் இன்று தொடக்கி வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS/CN/VM